# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## இலங்கை தொழில்சார் வங்கியாளர் சங்கம்
## (கூட்டிணைத்தல்)

**இலங்கை தொழில்சார் வங்கியாளர் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*பொலன்னறுவை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ரொசான் ரணசிங்க அவர்களால் 2015, திசெம்பர் மாதம் 15 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2015, நவெம்பர் மாதம் 30 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ *51* ஆம் சட்டமூலம் ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

## இலங்கை தொழில்சார் வங்கியாளர் சங்கம்
## (கூட்டிணைத்தல்)

### இலங்கை தொழில்சார் வங்கியாளர் சங்கத்தைக் கூட்டிணைப் பதற்கானதொரு சட்டம்

"இலங்கை தொழில்சார் வங்கியாளர் சங்கம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான சங்கமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட சங்கத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள் களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்திற்கென இலங்கையில் இதற்கு முன்னால் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் : *முன்னுரை.*

அத்துடன் சொல்லப்பட்ட சங்கம் எந்தப்பல்வேறு குறிக்கோள் களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுகாலவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ள தாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ள தாதலாலும், சொல்லப்பட்ட விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1**. இச்சட்டம், 2015 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இலங்கை தொழில்சார் வங்கியாளர் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*இலங்கை தொழில்சார் வங்கியாளர் சங்கத்தைக் கூட்டிணைத்தல்.*

**2**. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "சங்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை தொழில்சார் வங்கியாளர் சங்கத்தின் தற்போதைய உறுப்பினர்களாகவுள்ள அல்லது இத்தால் அமைத்துருவாக் கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக, இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும், (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "இலங்கை தொழில்சார் வங்கியாளர் சங்கம்" என்னும் பெயர் மகுடத்தின் கீழ் இடையறாவழியுரிமை

கொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாதல் வேண்டும்; அத்துடன் அப்பெயர் கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்; அத்துடன் அது பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத் தத்துவமும், அதிகாரமும் உடையதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக்குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) இலங்கையில் ஸ்திரமான வங்கிக் கட்டமைப்பொன்றை பேணுவதற்கு உதவுதல் ;

(ஆ) இலங்கைக்குள் அல்லது வெளியில் வங்கித் தொழில் மற்றும் நிதிசார் சேவைகள் ஆகிய துறைகளை பொறுப்பேற்று மேம்படுத்தி கற்கைகளுக்கு அனுசரணை வழங்குதல் ;

(இ) வங்கித் தொழில் மற்றும் நிதிசார் சேவைகள் மற்றும் சம்பந்தப்பட்ட விடயங்கள் போன்ற துறைகளுக்கு பரிசில்கள் மற்றும் புலமைப்பரிசில் அல்லது வேறு ஏதும் உதவிகளை வழங்கி கற்கைகளையும் ஆய்வுகளையும் ஊக்குவித்தல் ;

(ஈ) வங்கித் தொழில் மற்றும் நிதிசார் சேவைகள் போன்ற துறைகளை ஒழுங்கமைத்து ஆய்வுகளை மேம்படுத்தலும் அரசாங்கம், தனியார் மற்றும் சர்வதேச முகவர்கள் அல்லது நிறுவனங்கள் ஆகியவற்றிடமிருந்து ஒப்பந்த அடிப்படையில் கற்கைகள் மற்றும் ஆய்வுக் கருத்திட்டங்களை பொறுப்பேற்றல் ;

(உ) வங்கித் தொழில் மற்றும் நிதிசார் சேவைகளில் கற்பித்தல் மற்றும் பயிற்சியளித்தல் விடயங்களை திட்டமிட்டு ஒழுங்கமைத்தல் ;

(ஊ) வங்கித் தொழில் மற்றும் நிதிசார் சேவைகளுடன் தொடர்புபட்ட விடயங்களில் அறிவையும் விழிப்புணர்வையும் மேம்படுத்தும் எண்ணத்தில் மாணவர்களையும் ஏனையோரையும் ஆய்வு செய்முறைகளில் பயிற்சியளித்தல் ;

(எ) வங்கித் தொழில் மற்றும் நிதிசார் சேவைகள் துறைகளைச் சேர்ந்த உறுப்பினர்களின் திறமையையும் நிபுணத்துவத்தையும் மேம்படுத்தும் முகமாக அவர்களின் அறிவை இற்றைப்படுத்தல் ;

(ஏ) நிபுணத்துவ மற்றும் கல்விசார் பிரச்சினைகளை உறுப்பினர்கள் மற்றும் ஏனையோர் வெளியிட்டு, கருத்துக்கூறி, உரையாடி, கலந்துரையாடி தீர்ப்பதற்கான மன்றத்தைத் தோற்றுவித்தலும் வங்கித் தொழில் மற்றும் நிதிசார் சேவைகள் தொடர்பான பயனுறுதியான கொள்கையாக்கலுக்கு உதவுதல் ;

(ஐ) உறுப்பினர்களுக்கிடையே சகோதரத்துவம் புரிந்துணர்வு ஆகியவற்றை மேம்படுத்தி வங்கித் தொழில் மற்றும் நிதிசார் சேவைகள் தொடர்பாக அறிக்கைகளைத் தயாரித்து சமர்ப்பித்தல் ;

(ஒ) பொது அல்லது ஒரே விதமான ஆர்வத்தை கொண்டுள்ள வேறு நாட்டவர் மற்றும் சர்வதேச அமைப்புகள், நிறுவனங்களுக்கிடையே விழிப்புணர்வையும் கூட்டுறவையும் நட்பையும் மேம்படுத்தல் ;

(ஓ) ஒத்த நோக்கத்தையுடைய வங்கித் தொழில் மற்றும் நிதிசார் துறைகளில் தேசிய, பிராந்திய அல்லது சர்வதேச சங்கங்களுடன் ஒன்றிணைதல் ;

(ஔ) வங்கித் தொழில் மற்றும் நிதிசார் சேவைகள் பற்றிய அவ்வாறான ஆய்வுகள் மற்றும் கற்கைகளைப் பொறுப்பேற்று, மேம்படுத்தி தனது முன்னெடுப்பின் ஊடாக அல்லது உள்ளூர் ஒத்துழைப்புடன் அல்லது வெளிநாட்டு சங்கங்களுடன் சர்வதேச வரம்பிற்கு உட்பட்டவகையிலும் மற்றும் குறிப்பாக இலங்கையில் நடாத்துதல் ;

(க) தொழில் பொது நலன்களையும் மேம்படுத்தலும் பாது காத்தலும் ;

(ங) கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்களை பொதுமக்கள் மத்தியில் நடாத்தி ஆரோக்கியமான வங்கி நடைமுறை களையும் பழக்கங்களையும் மேம்படுத்தி அபிவிருத்தி செய்தல் ; மற்றும்

(ச) மேற்படி நோக்கங்களுடன் தோற்றம்பெறும் அல்லது தொடர்புடைய வேறு ஏதும் செயற்பாடுகளுடன் ஈடுபடுதல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**4**. இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தி னதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள் களை அல்லது அவற்றின் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மையானதுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும், செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத் தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள் நபர்களுடன் ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் செய்துகொள்வ தற்கும் வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், செயற்படுத்தல், முடிவுறுத்தல் என்பனவற்றுக்கும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணம் கடன் பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும், மானியக்கொடைகளை அல்லது நன்கொடைகளைப் பெறுவதற்கும் அல்லது சேகரிப்பதற்கும், அதன் நிதிகளை முதலீடு செய்வதற்கும், கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படும் ஏதேனும் கட்டடத்தை அல்லது கட்டமைப்பை நிறுவுவதற்கும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறை வேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும் சேவையாளர் களையும் வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலை யிலிருந்து நீக்கல் என்பவற்றுக்குமான தத்துவமும் அடங்கும்.

**5.** (1) கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம் கட்டுப்பாடு, நிருவாகம் ஆகியன இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதியின் ஏற்பாடு களுக்கும் அமைய, முகாமைப் பேரவை ஒன்றுக்கு உரித்தாக் கப்படுதல் வேண்டும். (இது இதனகத்துப் பின்னர் ''பேரவை'' எனக் குறிப்பீடு செய்யப்படும்)

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைப் பேரவை இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு உடனடியாக நேர்முந்திய நாளன்று பதவி வகிக்கின்ற நிறுவகத்தின் முகாமைப் பேரவை யாதல் வேண்டும்.

**6.** (1) ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மை கொண்டு பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது அவற்றில் எவற்றுக்கும் இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

(அ) உறுப்பாண்மையின் வகுப்பாகமும், ஒவ்வொரு வகுப்பினருமான உறுப்பினர்களினாற் செலுத்தப்படற் பாலனவான கட்டணங்களும், உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளுதல், உறுப்பினர் விலகுதலும் அல்லது அவர்களை விலக்குவதும் அல்லது அவர்கள் பதவிநீங்குதலும், உறுப்பினர்கள் பற்றிய இடாப்பைப் பேணுதலும் ;

(ஆ) சபையின் பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல் அல்லது பதவி தாங்குநர்கள் தமது பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் அத்துடன் அவர்களின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்களின், முகவர்களின் அத்துடன் சேவையாளர்களின் நியமனம், அவர்களின் தத்துவங்கள், கடமைகள், பணிகள், நியதி நிபந்தனைகள் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தினதும் குழுவினதும், அதன் ஏதேனும் உபகுழுவினதும் கூட்டங்களைக் கூட்டுவதிலும், நடாத்துவதிலும் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறையும் அதற்கான கூட்ட நடப்பெண் உட்பட அத்துடன் அதில் அலுவல்களை நடாத்துதல் ;

(உ) கூட்டுத்தாபனத்தினதும் பேரவையினதும் உறுப்பினர்களுக்கான தகைமையும், தகைமையீனமும் ; அத்துடன்

(ஊ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்காக கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்படும் விதிகள், அதேபோன்ற கூட்டத்திலும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதியொன்றாற்போன்று அதேமுறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது அது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தொழுகுதல் வேண்டும்.

நிறுவகத்தின் சொத்துக்களை கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக்கல்.

7. (1) இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்து -

(அ) நிறுவகத்தின் எல்லா அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனமும் ;

(ஆ) நிறுவகத்தின் எல்லா உரிமைகளும், தத்துவங்களும், சிறப்புரிமைகளும், அக்கறைகளும் மற்றும் நிறுவகத்தின் எல்லாப் பொறுப்புக்களும் ;

(இ) நிறுவகத்தின் எல்லாப் புத்தகங்களும், கணக்குகளும், ஆவணங்களும்.

கூட்டுத்தாபனத்துக்கு முழுமையாக உரித்தாதல் வேண்டும்.

(2) இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் (1) ஆம் உட்பிரிவின் பொதுமைக்குப் பங்கமின்றியும் -

(அ) நிறுவகத்துக்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும் கட்டணங்களும் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டும் ;

(ஆ) இச்சட்டம் தொடங்குவதற்கு நேர்முந்திய நாளன்று நிறுவகத்தின் எல்லாப் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தின் பொறுப்புகளாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(இ) இச்சட்டம் தொடங்குவதற்கு நேர்முந்திய நாளன்று நிறுவகத்தின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களாகவும் சேவையாளர்களாகவும் கருதப்படுதல் வேண்டும் ;

(ஈ) நிறுவகத்தின் நோக்கங்களுக்காகச் செய்து கொள்ளப் பட்டவையும், இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர் முந்திய நாளன்று உள்ளவையுமான எல்லா ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் கூட்டுத்தாபனத்தி னால் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களாகவும், உடன்படிக்கைகளாகவும் கருதப்படுதல் வேண்டும் ;

(உ) நிறுவகத்தின் அல்லது நிறுவகத்திற்கெதிராக தொடுக்கப்பட்டவையும் இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர் முந்திய நாளன்று முடிவுறாதிருக்கின்றவையுமான எல்லா வழக்குகளும், சட்டவழக்கு நடவடிக்கைகளும் கூட்டுத்தாபனத்தினால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்ட சட்ட வழக்கு நடவடிக்கைகளாகத் தொடர்ந்து நடாத்தப்பட்டு வலுவுக்கிடப்படுதல் வேண்டும்.

**8**. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கொடை, விருப்பாவணம், நன்கொடை, அறுதி, சந்தாப்பணங்கள் அல்லது கட்டணங்கள் என்ற வகையில் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் அல்லது அவ்வகைகளும் அது உள்ளடக்கியிருக்க வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

(2) பெறப்பட்ட எல்லாப் பணங்களும் ஒரு வங்கியிலோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்களிலோ கூட்டுத்தாபனத்தின் வரவில் வைப்பிலிடப்படுதல் வேண்டுமென்பதுடன் குழுவினால் தீர்மானிக்கப்படவேண்டிய முறையில் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துகொள்ளும் விதமாக அவை முதலீடு செய்யப்பட வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுகையில் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினை ஈடுசெய்வதற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய எல்லா பணத்தொகைகளும் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**9**. (1) கூட்டுத்தாபனமானது, அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல், வாங்கல்கள் என்பன பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் கணக்குகளும் கணக்காய்வும்.*

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் பேரவையினால் நியமிக்கப்பட்ட ஒரு தகைமை பெற்ற கணக்காய்வாளர் ஒருவரினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

(3) இப்பிரிவில் ''தகைமை பெற்ற கணக்காய்வாளர்'' என்பது -

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருந்து, அத்தகைய நிறுவகத்தின் பேரவையி

னால் கணக்காளரொருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளர்களுள் ஒவ்வொருவரும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக இருந்து, அத்தகைய நிறுவகத்தினால் கணக்காளரொருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

சங்கத்தினால் செலுத்தப்படற்பாலனவும் சங்கம் செலுத்தப்படவுள்ளதுமான கடன்கள்.

**10**. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று சங்கத்திற்குரிய எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்திகதியன்று சங்கத்துக்கு வருமதியாகவுள்ள கடன்கள், உதவுதொகைகள், ஒப்பப்பணங்கள் ஆகியன இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கலைப்பின் போது எஞ்சியுள்ள ஆதனம்.

**11**. கூட்டுத்தாபனம் கலைக்கப்படுவதன்மீது அதன் எல்லாக் கடன்களும் மற்றும் பொறுப்புக்களும் தீர்க்கப்பட்டதன் பின்னர் எத்தகையதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின் அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக் கொண்டதும் அல்லது கொண்டனவும், ஏதேனும் வருமானத்தை அல்லது இலாபத்தை அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிப்பதிலிருந்து

விதிகளினால் தடைசெய்யப்பட்டதும் அல்லது தடைசெய்யப் பட்டனவுமான வேறு ஏதேனும் நிறுவகத்திற்கு அல்லது வேறு எவையேனும் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவகம் அல்லது நிறுவனங்கள் கூட்டுத்தாபனம் கலைக்கப்படுகையில் அல்லது அதற்கு நேர்முந்திய நிலையில் கூட்டுத்தாபனத்தின் பேரவையி னால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**12.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது பேரவையினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்டவாறாக உத்தியோகத்தர் இருவரினது முன்னிலையிலன்றி, எத்தன்மையினதுமான சாசன மெதிலும் பொறிக்கப்படுதலாகாதென்பதுடன் அவர்கள் தாங்கள் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாசனத்தில் தங்களது பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு ஒப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாக ஒப்பமிடுவதிலிருந்தும் தனிவேறானதாதலும் வேண்டும்.

உறுப்பினர்களின் பொறுப்பை வரையறுத்தல்.

**13.** கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும், கூட்டுத்தாப னத்தின் தனிசுகளையும் பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்க்கும் நோக்கத்துக்காக அல்லது வேறேதேனும் நோக்கத்துக்காக, கூட்டுத்தாபனத்துக்கு அவரினாற் செலுத்தப்படற்பாலதான வருடாந்த ஒப்பப்பணத்தொகையை விஞ்சுகின்ற ஏதேனும் உதவுதொகையைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

குடியரசினதும் ஏனையோர்களினதும் உரிமைகளைப் பேணுதல்.

**14.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமை களையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக் கப்பட்ட ஏதேனும் குழுவினது உரிமைகளையேனும் பங்கப் படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**15.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 :* (வெளிநாடு) *ரூபா 1,849 :* ஒவ்வோராண்டும் திசெம்பர் *மாதம் 15* ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், *அரசாங்க தகவல் திணைக்களம்,* இல. *163, கிருலபனை மாவத்தை,* பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்